# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2330 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28

*2330 ஆம் இலக்கம் – 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 166 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 168 |


**கவனிக்க.**– *குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2023, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2023, மே மாதம் 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 04ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*


165- B 082449- 353 (2023/04)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

## காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆர்.ஏ.நதீர லக்மால் ஆகிய நான்,காணி அபிவிருத்த கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி / அரசாங்க அதிபர் அவர்களினால் 2000.04.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/ கொத்/ ரொத்/ பிர/ கோ/275 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ரொக்ஸ்சைல்ட் புஸ்ஸல்லாவ எனும் முகவரியில் வசிக்கும் ஷ்ரியானி விஹாராகம என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கொ/152/84/2001 ஆம் இலக்கத்தின் கீழ் 2001.02.19 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.05.19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*நுவரெலியா நிருவாக மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் பல்லேபனை கோரளையிலுள்ள 456ඊ நவமொறப்பே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாவெல நெகதி கம்மெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் அத்தியட்சகர் நுவரெலியா என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது. நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு நு 915 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் 91 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.091 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:*

*(கொடுப்பனவு பத்திரத்தில் எல்லைகள் குறிப்பிடப்படவில்லை.*

*வடக்கு : லொட் 78 மற்றும் 79;*
*கிழக்கு : லொட் 79 மற்றும் 90;*
*தெற்கு : லொட் 90 மற்றும் 70;*
*மேற்கு : லொட் 70 மற்றும் 78.*

*ஆர்.ஏ. நதீர லக்மால்,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*கொத்மலை,*
*2023.01.30.*

*04-300/1*

---

இணைப்பு 09

## காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடைப்பட்ட ) டீ.ஏ.பி. தனன்சூரிய ஆகிய நான்,காணி அபிவிருத்தி*

கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1982, மாச்சு 25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/ பிர/ 141 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான சாந்திபுர எனும் முகவரியில் வசிக்கும் திருமதி மாவிலகே பொடினோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நுவ/1/87/82 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.04.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.05.19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் கடவத்சத்தர பற்றிலுள்ள /கோரளையிலுள்ள 535 எம் சாந்திபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஸாந்தி புர அல்லது கிக்கிலியாமான என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு எம்.6/42 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் பீ.பீ.ஏ. 3140 ஆம் இலக்க துண்டு 65 எனக் காட்டப்பட்டுள்ளதும் 01 றூட் 13 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கிக்கிலியாமான அடர் பிரதேசம் ( காடு) கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:

வடக்கு : கிக்கிலியாமான ஊர்;
கிழக்கு : பீ.பீ.ஏ.3140 துண்டு இலக்க 66;
தெற்கு : சாலை;
மேற்கு : பீ.பீ.ஏ.3140 துண்டு இலக்க 64.

டீ.ஏ.பி. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி
ஆணையாளர்
( மாகாணங்களுக்கிடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
நுவரெலியா.
2023.01.27.

04-300/2

---

இணைப்பு 09

**காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் / பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கு இடைப்பட்ட) கே.டீ.ஏ. கெரெவ்கொட ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தம சனாதிபதி அவர்களால் 1996.02.29 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத்/ நவ/பு/33964 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான முல்லேகம, நவகத்தேகம எனும் முகவரியில் வசிக்கும் சுவன்கே ஸ்டென்லி லாவுஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்டிஓ79/15 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.01.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை

மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இதுதொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.05.19 ஆந் திகதி எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிருவாக மாவட்டத்தில் நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவின் கிறிமெடியாவ பற்றில்/கோரளையிலுள்ள 645/3 முல்லேகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த முல்லேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் புத்தளம் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 01 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசகாணி.

வடக்கு : பெமாநிஸ் என்பவரின் காணி;
கிழக்கு : சலமன் பிறனான்துவின் காணி;
தெற்கு : பியதிஸ்சவின் காணி;
மேற்கு : சந்திரலதாவின் காணி.

கே.டீ.ஏ. கெரெவ்கொட,
பிரதேச செயலாளர/பிரதிக் காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடைப்பட்ட).

பிரதேச செயலகம்,
நவகத்தேகம.
2023.01.25.

04-301

---

## நானவித அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69441.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : HDLC/04/41/06/121.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்ட திஸ்ஸமஹாராமய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரிந்த -19 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பலட்டுபான எனும் கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 1721 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் A மூலம் காட்டப்பட்ட 02 ஏக்கர் 03றூட், 25.8 பேர்ச் விஸ்தீரணமுள்ள அரச காணியை சுற்றுலாத்துறை ஹோட்டல் கருத்திட்டத்திற்காக திரு. கபடாகே புத்திக்க துஷார ஜயவிலால் எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அரச காணி;
கிழக்கு : கிளை பாதை;
தெற்கு : அரச காணி;
மேற்கு : கிளை பாதை.

03. குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) வருடங்கள் (2023.03.29ஆந் திகதியிலிருந்து முப்பது வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- பிரதான விலைமதிப் பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் இந்தக் குத்தகைப் பணம் முந்தைய 05 ஆண்டுகளின் முடிவில் அறவிடப்பட்ட தொகையில் 50% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

*தவணைக் கட்டணம்:*வருடாந்த குத்தகை தொகையை விட மூன்று மடங்காகும்.

*அபராதக் கட்டணம்:* 2023 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தியடையாத வணிக மதிப்பில் 10% தொகை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி ஹோட்டல் கருத்திட்டத் திற்காக தவிர்ந்தவேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள /கட்டப்பட்ட கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.03.29 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் முடியும் வரை கீழ்க்குத்தகைக்கு விடுதல் அல்லது உரிமை மாற்றுதல் அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் செலுத்த வேண்டிய நிலுவையான குத்தகைப் பணத்திற்கு 10% அபராத வட்டி விதிக்கப்படும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத் திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ.ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.04.19.

04- 315